**<u>O.S. No. 275 /2025</u>**

**<u>Date: 08.08.2026</u>**

**பிவா.சா.1 ஜெயசந்திரன்**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வாதி தாக்கல் செய்த வழக்கு விவரம் தெரிந்து தான் நான் எனது தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரைக்கு நான் தான் விவரம் சொன்னேன் என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொல்லியுள்ள சொத்து விவரம் சரியா என்று கேட்டால் எனக்கு தெரியாது. பிராது 1ம் அயிட்ட சொத்து தற்போது உள்ள சர்வே எண்.611/4ல் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.12ல் புல எண். 611க்கான புல வரைபடம் என்றால் சரிதான். மேற்படி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகளின்படிதான் சர்வே எண். 611/4க்கான நிலம் இருந்து வருகிறது என்றால் சரிதான். சர்வே எண். 611/4க்கு மேல் புறமாக உள்ள நிலம் சர்வே எண். 611/5 என்றால் சரிதான். சர்வே எண். 611/5க்கு மேல்புறமாக வடக்கே இருந்து தெற்காக சர்வே எண். 611/6 , சர்வே எண்.611/7, சர்வே எண்.611/8,சர்வே எண்.611/9,சர்வே எண்.611/10, உள்ள இடங்கள் உண்டு என்றால் சரிதான். சர்வே எண். 611/4, 5,10 ன் தென்புறமாக கிழமேலாக ஒரு பாதை உள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதை மேல் கடைசியில் தென்வடல் 8 அடி அகலத்திலும், கீழ் கடைசியில் 10 அடி அகலத்திலும் உள்ளது என்றால் சரிதான். நான் எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சின்னப்பிள்ளை என்ற ஆவுடையம்மாள் எனக்கு தந்தை வழி பாட்டி என்றால் சரிதான். மேற்படி சின்னப்பிள்ளை என்ற ஆவுடையம்மாள் 21.09.1972ல் கிரையம் பெற்றதாக எனது எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் தான் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 என்றால் சரிதான். மேற்படி சின்னப்பிள்ளை என்ற ஆவுடையம்மாள் வாங்கிய மேற்படி அசல் கிரையம் ஆவணம் என்னிடம் உள்ளது என்றால் சரிதான் . மேற்படி அசல் கிரைய ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தில் உள்ள சொத்தின் அளவுகள், நான்கு மால்கள் எல்லாம் சரியானதா என்றால் சரிதான். சின்னப்பிள்ளை என்ற ஆவுடையம்மாள் மேற்படி கிரைய ஆவணத்தை தாதா சாகிப் என்பவரிடம் இருந்து வாங்கினார் என்றால் சரிதான். தாதா சாகிப் என்பவரின் தந்தை பெயர் காதர் பாட்சா சாகிப் என்றால் சரிதான். காதர் பாட்சா

சாகிப் என்பவர் மேற்படி ஆவண சொத்தை யாரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி சின்னப்பிள்ளை என்ற ஆவுடையம்மாள் கிரையம் வாங்கிய சொத்தை முன் ஆவணங்கள் மூலம் யார் யாருக்கு பாத்தியப்பட்டது என்பதை வாதி அவரது பிராதில் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார் ஆனால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணங்கள் சரியா தவறா என்று நான் முன் ஆவணங்களை பார்த்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி சின்னப்பிள்ளை என்ற ஆவுடையம்மாள் வாங்கிய கிரைய சொத்திற்கு மேல்பக்கமாக அலிமா பீவி வீட்டிற்கும், காலி மனைக்கும் கிழக்கே என்று மால் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அலிமா பீவி என்பவர் வாதியின் தந்தை வழி பாட்டி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அலிமா பீவி வாதியின் தந்தை வழி பாட்டியா என்பதை நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. மேற்படி சின்னப்பிள்ளை என்ற ஆவுடையம்மாள் கிரையம் பெற்ற சொத்தின் அளவு கிழ மேல் வடபுறம் 4 3/4 தச்சு முழம், தென்புறம் 5 தச்சு முழம், தென்வடல் 21, 5/8 தச்சு முழம் என அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அளவுகள் படியான சொத்தைதான் மேற்படி சின்னப்பிள்ளை என்ற ஆவுடையம்மாள் அனுபவித்து வந்து அதன் பின்னர் எனது தந்தை அனுபவத்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணம் சொத்து தான் சர்வே எண். 611/4 ல் கீழ கடைசியில் உள்ள சொத்து என்றால் சரிதான். மேற்படி கிரைய சொத்துக்கு மேல் பக்கமும் புல எண். 611/4 ல் உள்ள மீதி இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி மீதி இடம் தான் பிராதில் குறிப்பிட்டுள்ள 1ம் அயிட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி பிராது 1ம் அயிட்ட சொத்து தான் வா.சா.ஆ. 6 ல் கண்ட சொத்தின் மேல்பக்க எல்கையாக குறிப்பிடப்பட்ட அலிமா பீவி கைவசம் சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அலிமா பீவி என்பவரிடமிருந்து வா.சா.ஆ.6 க்கு பிற்பாடு எனது பாட்டி சின்னப்பிள்ளை என்ற ஆவுடையம்மாளோ, எனது தகப்பனாரோ, நாங்களோ, சொத்து எதுவும் கிரையம் வாங்கி கொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி அலிமா பீவி என்பவரிடமிருந்து நாங்கள் கிரையம் வாங்கியதாக எழுத்து பூர்வமான ஆவணம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையிலோ, அல்லது நிரூபண உறுதி கூற்றிலோ மேற்படி அலிமா பீவி என்பவரிடமிருந்து நானோ எனது முன் பாத்தியஸ்தர்களோ, கிரையம் பெற்றதாக எந்த சங்கதிகளும் சொல்லவில்லை என்றால்

சரிதான். சின்னப்பிள்ளை என்ற ஆவுடையம்மாள் கிரையம் பெற்ற சொத்தை நானும், எனது சகோதர்களும் சேர்ந்து பாக பாத்திய விடுதலை ஆவணம் 28.03.2011 ல் செய்து கொண்டதாக எனது எதிர் வழக்குரை மற்றும் நிரூபண உறுதி கூற்றிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 28.03.2011 ம் தேதிய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை, மற்றும் நிரூபண உறுதி கூற்றில் 611/5 ல் உள்ள சொத்து எனது குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளது சரியா தவறா என்றால் சரிதான். 611/5 ல் உள்ள சொத்தில் எனக்கோ,. எனது குடும்பத்திற்கோ எந்த உரிமையும் கிடையாது. மேற்படி சர்வே எண். 611/5 ல் உள்ள சொத்து செய்யது மீரா ராவுத்தர் என்பவர் பெயரில் பட்டாவாகியுள்ளது என்றால் சரிதான். அவர் அனுபவத்தில் உள்ளதா என்றால்அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண். 611/5 ல் உள்ள சொத்து செய்யது மீரா ராவுத்தர் என்பவருக்கு முன்பாக மைதீன் பாட்சா சாகிப் என்பவரிடம் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண். 611/4 இடத்திற்கும் சர்வே எண். 611/5 ன் இடத்திற்கும் வடபக்கம் முன்பு குருநாதத் தேவர் தோட்ட மனையாக இருந்து தற்போது நல்லதம்பி மனையாக இருந்து வருகிறது என்றால் சரிதான். 28.03.2011 ல் வேலுச்சாமி தேவரும், 1 முதல் 4 பிரதிவாதிகளும் சேர்ந்து எனக்கு எழுதி கொடுத்த பாக பாத்திய விடுதலை ஆவணத்தின் சான்று நகல் தான் என்னிடம் காட்டப்படும் வாசா.ஆ.7 என்றால் சரிதான். மேற்படி வாசா.ஆ.7 ல் சின்னபிள்ளை என்ற ஆவுடையம்மாள் பெற்ற கிரைய ஆவணத்தின் தேதி மற்றும் ஆவண எண் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் எனக்கு பாகம் பாத்திய விடுதலை செய்து கொடுத்த இடமானது வா.சா.,ஆ.6 ல் கண்ட சொத்தின் தென் பகுதி சொத்து என்றால் சரிதான். மேற்படி வாசா.ஆ.6 ஆவணத்தின் வடபகுதி சொத்து கருப்பசாமி பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்கள் 3,4 பிரதிவாதிகளால் எனக்கு புல எண்.611/5 ல் கண்ட சொத்தைப் பொருத்து எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் அந்த சொத்தை எனக்கு பாத்தியம் செய்து கொடுத்த நபருக்கு 25.04.2013 ம் தேதிய 504/2013 என்ற தான செட்டில்மெண்டு பத்திரம் முன் ஆவணமாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முன் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தான செட்டில் மெண்டு ஆவணத்தை இந்த 4ம்பிரதிவாதிக்கு யார் எழுதிகொடுத்தார் என்ற விவரத்தை நான் எனது எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிவா.சாஆ.1 ஆவணத்தின் முன் ஆவணம் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு ஏதாவது காரணம் உண்டா என்றால் இல்லை. சர்வே எண். 611/5ல் உள்ள சொத்து எனது பாட்டி கிரையம் வாங்கிய சொத்திற்கு சம்மந்தப்படாதது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்த பி.வா.சா.ஆ.2 ஆவண சொத்து வா.சா.ஆ. 6ல் சம்மந்தப்படாதது என்றால் சரிதான். ஆனால் பி.வா.சா.ஆ.2 ல் அதில் கண்ட சொத்து வா.சா.ஆ. 6 கிரைய ஆவண சொத்தில் சம்மந்தப்பட்டதாக விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்றாலும், அது தவறானது என்றாலும் சரிதான். வாதி 2016ம் ஆண்டு இந்த வழக்கை என் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 2016 ஆண்டு முதல் பி.வா.சா.ஆ. 1, 2 ஆவணங்களை சீர்திருத்தம் செய்து கொள்ள பி.வா.சா.ஆ.3 ,4 காலம் வரை நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 611/4ல் மீதி உள்ள சொத்திற்கு மேல் பக்கம் குருசாமி தேவருக்கு வீடு உள்ளதா என்றால் இல்லை. மேற்படி சர்வே எண். 611/4லும் மேற்படி குருசாமி தேவருக்கு சொத்து எதுவும் இல்லை. சர்வே எண். 611/5ல் குருசாமி தேவருக்கு பாத்தியம் இல்லை என்றால் சரிதான். சர்வே எண். 611/5க்கு மேல் பக்கமாக சர்வே எண். 611/10ல் குருசாமிதேவருக்கு வீடு உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1,2ல் கண்ட சொத்துக்களில் சர்வே எண்ணைப் பொருத்து மட்டும் பி.வா.சா.ஆ.3, 4 சீர்திருத்தம் ஆவணங்கள் மூலமாக சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றாலும் மால் மற்றும், அளவுகளை திருத்தம் செய்யவில்லை என்றாலும் சரிதான். பி.வா.சா.ஆ.3, 4ல் உள்ள சொத்துக்கள் சர்வே எண்களை பொருத்து சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதில் கண்ட மால்களின் படி 611/5ல் உள்ள சொத்தை தான்குறிக்கிறது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்களின்படி சர்வே எண். 611/4ல் உள்ள இடங்கள் எதுவும் எனக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண். 611/5ல் உள்ள இடங்கள் எனது சகோதரர்களுக்கு பாத்தியம் இல்லாத நிலையில் மோசடியாக பி.வா.சாஆ.1,2 ஆவணங்கள் எனது பெயரில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சாஆ.1,2 ஆவணங்களின் கீழ் பக்க மாலாக குறிப்பிட்டுள்ளபடி

எங்களுக்கு சொத்துக்கள் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. பி.வா.சாஆ.1,2 ஆவணங்களின் கீழ் பக்கமாக குறிப்பிடப்பட்டுள்ள மாலில் கண்ட சொத்து 611/4 ல் மீதி சொத்தான பிராது 1ம் அயிட்ட சொத்து என்றால் சரியல்ல. மேற்படி பிராது 1ம் அயிட்ட சொத்தை நான் மோசடியாக கைப்பற்றவேண்டும் என்ற எண்ணத்தில் தான் பிவா.சாஆ.1,2 ஆவணங்களில் கீழ் பக்கம் தவறான மால் காட்டி உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி அதே காரணத்திற்காகத்தான் பிவா.சாஆ.3,4 ஆவணங்களை மோசடியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிராது 1ம் அயிட்ட சொத்தை கைப்பற்றிக்கொள்ள வேண்டும் எண்ணத்தில் தான் பிவா.சாஆ.3,4 ஆவணங்களை அதில் கண்ட சொத்து சர்வே எண். 611/4 ல் உள்ளதாக காட்டி உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி எனது பாட்டி கிரையம் வாங்கிய வா.சா.ஆ. 6 ல் கண்ட சொத்து தற்போது எனது வசமும், எனது சகோதரர் 5ம் பிரதிவாதி வசமும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தை நாங்கள் அனுபவிப்பதை வாதி இடையூறு செய்யவில்லை என்றால் வாதியை எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்து நாள் முதல் வாதி யார் என்று தெரியாமல் தான் நான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். தற்போது வழக்கு நடக்கும் சொத்தானது வா.சா.ஆ.6 ல் உள்ள சொத்திற்கு மேற்கு புறமாக உள்ள சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்தை பார்வையிட நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு சொத்துக்கள் பார்வையிடப்பட்டு அறிக்கைகள் மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராது 1ம் அயிட்ட சொத்தில் வீடு உள்ளதா என்றால் இல்லை. மேற்படி சொத்தில் வீடு இருந்ததாகவோ, அதை நாங்கள் அனுபவம் செய்து வந்ததாகவோ எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1,2 ஆவணத்திலும் வீடு இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட பிசி பகுதிக்கு கீழ்புறமாக தென்புறத்தில் எனது வீடும், வடபுறத்தில் 5ம் பிரதிவாதி வீடு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.. எனது வீட்டின் உள் அளவு கிழமேல் 11 அடி. எனது வீட்டின் கீழ் பக்கம் உள்ள சுவர் எனக்கு பொது சுவர், மேல்பக்க சுவரின் கன அளவு 3/4 அடி, கீழ் பக்க சுவரின் கனம் 1 1/2 அடி உள்ளது . எனது வீட்டின் மொத்த அளவு 12 1/2 அடி எனது அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி அதே

அளவுள்ள வீடு எனது தம்பி கருப்பசாமிக்கு உள்ளது என்றால் சரிதான். எனது மற்றும் 5ம் பிரதிவாதியின் வீட்டின் மேல்பக்க சுவரில் மேற்கு பார்த்து தனித்தனியாக வாசல் விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வீட்டின் தரைத்தளம் , முன் பக்க தரைத்தளத்தில் இருந்து 3 அடி உயரத்தில் உள்ளது. அதே மாதிரி தான் இந்த 5ம் பிரதிவாதியின் வீடும் உள்ளது என்றால் சரிதான். எனது மற்றும் 5ம் பிரதிவாதியின் வீட்டின் முன்பக்க தரை தளத்திற்கு எங்கள் வீட்டின் தரை தளத்தில் இருந்து இறங்க படிகட்டுகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 4 படிகட்டுகள் உள்ளது. ஒவ்வொரு படியும் 3/4 அடி இருக்கும். நானும், எனது தம்பியும் பிசி சுவருக்கு மேற்காக அமைத்துள்ள படிகட்டுகள் கிழமேல் 3 அடி அகலத்தில் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் படிகட்டின் மேல்பக்கமாக உள்ள படிகட்டில் மேல கடைசி படிகட்டையும் சேர்த்து சிமெண்டு தளம் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான் மேற்படி சிமெண்டு தளத்தின் அளவு தென்வடல் 3 மீட்டர், கிழமேல் 2.4 மீட்டர் என்று ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அந்த பகுதியை எல்,எம்.கே என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் அமைத்துள்ள சிமெண்டு தளம் எனது படிகட்டின் மேலகடைசி ஒரு படியுடன் சேர்த்து பிராது 1ம் அயிட்ட சொத்தின் கீழ பகுதியையும் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிராது 3ம் அயிட்ட சொத்தின் ஆக்கிரமிப்பு பகுதிகளை ஆணையர் அவருடைய அறிக்கையில் AE புள்ளிகளுக்கு தென்புறமாக அமைந்துள்ளதாக ஆணையர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ன்படி எனது பாட்டிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கும் கூடுதலான சொத்தை பிராது 1ம்அயிட்ட சொத்தின் கீழ் பகுதியில் நானும், எனது சகோதர் கருப்பசாமி என்பவரும் ஆக்கிரமித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல 60 வருடமாக எங்கள் அனுபவத்தில் உள்ளது. எங்கள் அனுபவத்தை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 611/4 க்கு தற்போதும் வாதியின் பெயரில் கூட்டுப்பட்டா உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுப்பையா தேவர் மகன் மீனாட்சி சுந்தர தேவர் எனது தாத்தா ஆவார். அவர் சின்னப்பிள்ளை என்ற ஆவுடையம்மாள் என்பவரின் கணவர் ஆவார். மீனாட்சி சுந்தர தேவர் சர்வே எண். 611/4 ல் சொத்தை யாரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மீனாட்சி சுந்தர தேவர் என்பவர் கிரையம் பெற்றதாக நான் ஆவணங்கள் எதுவும் பார்த்துக்கொள்ளவில்லை அவ்விதமான ஆவணங்கள் எதுவும்

என் கைவசம் இல்லை. சர்வே எண். 611/4 ல் உள்ள சொத்து மீனாட்சி சுந்தர தேவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று நான் கட்சி செய்யவில்லை என்றால் சரிதான். 611/4 ல் உள்ள சொத்து வா.சா.ஆ. 6 ன் மூலம் மட்டும் தான் எனது பாட்டிக்கு பாத்தியப்பட்டதாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ல் கண்ட சொத்திற்கு மேல்பக்கம் எனக்கு எந்த சொத்தும் இல்லாத நிலையில் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து இருப்பதாக மால் கண்டு வா.சா.ஆ.7 ஆவணத்தை பிராது 1ம் அயிட்ட சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 7, பிவா.சா.ஆ. 1,3 ன் அடிப்படையில் பிராது 1ம் அயிட்ட சொத்தில் எங்களுக்கு உரிமை இருப்பதாக தவறாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. 611/4, 611/5, 611/10 ல் தென்புறமாக இருந்த நடைபாதை 611/4 ல் கீழகடைசி வரை இருந்தது என்றால் சரிதான். மேற்படி நடைபாதையிலும் கிழமேலாக 15 அடி நிலத்தை ஆக்கிரமித்து கட்டுமானம் கட்டி உள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி நடை பாதையில் தென்புறமாக படிகட்டும் அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல. கிழமேல் நடைபாதையின் ஒரு பகுதியை ஆக்கிரமித்து கட்டுமானம் கட்டியுள்ளதையும், படிகட்டு அமைத்துள்ளதையும் ஆணையர் அவரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. பிராது 1ம் தபசில் சொத்து வாதிக்கு பிராதில் கூறியப்படி அவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பிசி சுவரில் மேற்கே பார்த்து ஜன்னல்கள் அமைத்து அதில் சன் செயிடுகளும், அமைத்துள்ளோம் அதன் அகலம் கிழமேல் 2 அடி என்றால் சரிதான். மேற்படி சன்செயிடுகளும், பிராது 1ம் அயிட்ட சொத்தின் ஒரு பகுதி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிராது 3ம் தபசில் விவரித்துள்ள ஆக்கிமிப்பு பகுதியை நாங்கள் 1ம் தபசில் சொத்தின் உரிமை இல்லாத நிலையில் ஆக்கிரமித்து கட்டியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. 2ம் தபசில் 3ம் தபசில் ஆக்கிமிரப்பு கட்டுமானங்களை 2014ம் வருடம் ஜீன் மாதம் மத்தியில் தான் கட்டியுள்ளீர்கள் என்றால் சரியல்ல . 5ம் பிரதிவாதி அவருடைய இடத்தில் 2015 ல் வீடு கட்டினார் . நான் 1998 ல் வீடு கட்டினேன். நான் வீடு கட்டியதற்கு சிவகிரி பேரூராட்சியில் வரைபடம் அனுமதி வாங்கியுள்ளேன். மேற்படி வரைபட ஒப்புதல் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வரைபட ஒப்புதலை நான் தாக்கல் செய்தால் நான் எந்த வருடம் வீடு

கட்டினேன் என்பது தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி வரைபட ஒப்புதல் மற்றும் அனுமதி உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் நான் எப்போது கட்டுமானம் கட்டினேன் என்பது தெரிந்து விடும் என்பதால் தான் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் 1998 ல் வீடு கட்டியதாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. சர்வே எண். 611/4 தற்போது ஜி ஆர் பட்டா 3264 ல் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண். 611/4 ல் எனது பெயருக்கு பட்டா ஏதும் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி சர்வே எண்ணிற்கு பட்டா எனது சகோதரர் பெயரிலும் இல்லை. சர்வே எண்.611/4 க்குரிய ஜி ஆர் பட்டா 3264 எந்த காலகட்டத்தில் ஏற்படுத்தப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. சர்வே எண்.611/4 ல் உள்ள பட்டாவில் இருந்து வாதியின் பெயரை நீக்க வேண்டும் என்று நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனது சகோதரர்களும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 2–5 பிரதிவாதிகள் இவ்வழக்கில் கட்சி செய்யவில்லை என்றால் சரிதான். வாதியின் வழக்கு உண்மை என்பதால் தான் 2 – 5 பிரதிவாதிகள் இந்த வழக்கில் கட்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சிறுபான்மை இனத்தை சேர்ந்த வாதியிடம் இருந்து பிராது 1ம் தபசில் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தவறாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வகைக்காக வேண்டியே பி.வா.சா.ஆ. 1–4 ஆவணங்களை மோசடியாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆகையால் வாதிக்கு வழக்கில் கண்ட பரிகாரங்கள் கிடைக்கத்தக்ககது என்றால் சரியல்ல.